பொதுச் சுற்றறிக்கை இல: 01 -34 /2016

எனது இலக்கம்:DMH/A/18/2016

சுகாதார போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு,

385, வென்.பத்தேகம்ம விமலவம்ச தேரோ மாவத்த,

கொழும்பு -10

16.06.2016

அனைத்து :

மாகாண சுகாதார சேவை செயலாளர்கள்

மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்

மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்கள்

போதனா வைத்தியசாலை பணிப்பாளர்கள்

சிறப்பு வேலைத்திட்டங்களின் தலைவர்கள்

நிறுவனத்தலைவர்கள் மற்றும் மருத்துவ பீட பீடாதிபதிகள்

**திருநங்கை சமூகத்தினருக்கு பாலின அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல்**

திருநங்கை எனும் சொற்றொடரானது,ஒருவர் தமது பிறப்பில் காணப்படும் பால் இயல்பிலிருந்து தமது உள்ளுணர்வு காரணமாக வேறுபட்ட பாலியல்பை (பாலின அடையாளப்படுத்தல்) அடைதலை குறிக்கும் ஒரு பொதுச்சொற்றொடராகும். உதாரணமாக, பிறப்பின்போது ஆணாகக் கருதப்படும் ஒருவர் பின்பு தன்னை பெண்ணாக அடையாளப்படுத்துதல் திருநங்கை பெண்ணாகக் கருதப்படும். (உலக சுகாதார நிறுவனம், 2015)

திருநங்கை சமூகத்தினர் எப்பொழுதும் சமூக பொருளாதார அரசியல் மற்றும் நீதித்துறைகளில் ஒதுக்கப்படுகின்றனர்.இவர்கள் துன்புறுத்தல்கள் , வல்லுறவு, மற்றும் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்படும் ஆபத்தில் உள்ளனர்.

மேலும் பொது இடங்களான உணவு விடுதிகள், சினிமா தியட்டர்கள், பொது மலசலகூடம் போன்றவற்றிட்கான அணுகுதலில் பாரபட்சம் காட்டப்படுகின்றனர்.

ஆதலால் திருநங்கை ஒருவர் தனது பிறப்புச்சான்றிதலில் குறிப்பிடப்படும் பாலினத்தை, தான் அடையாளப்படுத்தும் பாலினத்துக்கு மாற்றுவதானது துள்ளியமாக சட்டரீதியான ஆவணங்களில் பாலினத்தை பிரதிபலிக்கச் செய்யும் மிகமுக்கிய படிமுறையாகும். மேலும், இவ்வாறு மாற்றுவதானது வேறு அடையாளங்களையும் சட்டரீதியான ஆவணங்களையும் பெற்றுக்கொள்வதற்கும் தனது பாலினத்தை உறுதிப்படுத்தவும் உதவும்.

மேற்கண்ட கருத்துக்களை முன்வைத்து, சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது ஒவ்வொரு அரசாங்க வைத்தியசாலைகளிலும் திருநங்கை சமூகத்தினருக்கான சேவைகளை மேம்படுத்தும் முகமாக விசேட மனநல நல வைத்தியசேவையை (மனநல விசேட வைத்திய நிபுணர்) பெற்றுத்தர தீர்மானித்துள்ளது.

ஒருவர் இச்சேவையை பெற்றுக்கொள்ள நாடுமிடத்து, வைத்தியசாலைகளில் பொறுப்பாகவுள்ள மனநல விசேட வைத்திய நிபுணர், பூரண வைத்திய பரிசோதனை, உளவள ஆலோசனை மற்றும் பாலின அங்கீகாரச் சான்றிதளை வழங்கி பிறப்புச்சான்றிதலில் குறிப்பிடப்படும் பாலினத்தை, மாற்றுவதற்கு உதவுதல் வேண்டும். இவ் அங்கீகாரச் சான்றிதழானது 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதுடன் பிறப்புச்சான்றிதலில் மாற்ற விரும்பும் பாலினத்தை குறிப்பிட்டும் காணப்படும்.

இவ் ஆவணமானது மனநல விசேட வைத்திய நிபுணர் மற்றும் அமைச்சிற்கு கீழுள்ள வைத்தியசாலையின் நிறுவனத்தலைவர் இருவரினதும் உறுதிபடுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.தனியார் நிலையமொன்றில் ஒருவர் இச்சேவையை நாடுமிடத்து அவர்களை அருகிலுள்ள மனநல விசேட வைத்திய நிபுணர் ஒருவர் சேவையாற்றும் அரசாங்க மருத்துவமனைக்கு சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக அனுப்புதல் வேண்டும்.

திருநங்கைகள் தொடர்பான தகவல்களை முகாமைத்துவம் செய்வதற்காக ஒரு முறையான அமைப்பு வழிவகுக்கப்படும்.

இச்சேவை சம்மந்தமாக மேற்பார்வை செய்யும் நோக்கில் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இது தொடர்பிலான பதிவுகள் பேணப்படும்.

உளநல சுகாதாரப் பணிமனையானது தற்போது திருநங்கை தகவல் தொடர்பான முகாமைத்துவம் செய்வதற்கான செயன்முறைகளை செயற்படுத்துவதற்கான நடைமுறைகளை முன்னெடுக்கின்றது.

இது தொடர்பில் இரு ஆவணங்கள் வைத்தியசாலைகளில் பேணப்படும்.

- திருநங்கை பற்றிய அறிவிப்புப் பதிவு - (Transgender Notification Register-TNR):ஒருவருக்கு பாலின அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படுமிடத்து அவருடைய பெயர், பிறந்த திகதி, பிறப்பின்போது பாலினம், தற்போது விரும்பும் பாலினம், தேசிய அடையாள அட்டை இலக்கம்,நோயாளர் கட்டில் பதிவேட்டு இலக்கம், சிகிச்சை நிலைய இலக்கம் உள்ளடக்கப்பட்டு இப்பதிவானது வைத்தியசாலையில் மனநலப்பிரிவில் பேணப்படும்.
- பாலின அங்கீகாரச் சான்றிதழ் - (Gender Recognition Certificate-GRC): இது மூன்று பிரதிகளாக தயாரிக்கப்பட்டு ஒரு பிரதியானது குறித்த நபருக்கும் ஏனைய பிரதிகளில் ஒன்று வைத்தியசாலையிலும் மற்றைய பிரதி உளநல சுகாதார பணிமனைக்கும் அனுப்பி வைக்கப்படும்.

அனைத்து மனநல விசேட வைத்திய நிபுணர்களையும் இது தொடர்பான ஏனைய நிபுணர்களையும் இச்சசுற்றறிக்கை சம்பந்தமாக விழிப்பூட்டி நேரிய சேவையை வழங்க வழிகோலுமாறு தயவுடன் வேண்டப்படுகிறீர்கள்.உங்கள் தகவல்களுக்காக பாலினம் அங்கீகாரம் சான்றிதழின் பிரதியொன்றையும்,அறிவிப்புப் பதிவேட்டின் பிரதி ஒன்றையும் இத்துடன் இணைத்துளோம்.மேலதிக விபரங்களுக்கு சுகாதார அமைச்சு உளநலச் சுகாதார பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya",
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

Dr.பீ.ஜீ.மகிபலா,

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதி:
சுகாதார போஷனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செயலாளர்
பொது பிரதிபணிபாளர் -எம்.எஸ்.I
பொது பிரதிபணிபாளர் -எம்.எஸ்.II
பொது பிரதிபணிபாளர் -தொற்றா நோய் தடுப்புப் பிரிவு
பணிபாளர் உளநல சுகாதாரப் பணிமனை
தலைவர்,இலங்கை உளநல விசேட நிபுணர்கள் சங்கம்

சு-1257

# பாலின அங்கீகாரச் சான்றிதழ்

## சுகாதார அமைச்சு -இலங்கை

*இச்சான்றிதலானது ஒருவருக்கு தனது பிறப்பிலுள்ள பாலினத்தை மாற்றும் நோக்கிலே,பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தின் பகுதி 27 மற்றும் 52(1) கீழ் வழங்கப்படும்.*

**A.பொது விபரங்கள்**

1.முழுப் பெயர்: ..........................................................................................................................

..........................................................................................................................

2.தந்தையின் பெயர்: ..........................................................................................................................

3.தாயின் பெயர்: ..........................................................................................................................

4.முகவரி: ..........................................................................................................................

5.தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................................

6.பிறப்பின் பொது பால்: ஆண்/பெண் (சரியான பதிலின் கீழ் கோடிடுக).

7.பிறந்த திகதி: .......................................... பிறந்த இடம்: ..........................................

8.பதிவு இலக்கம்: .......................................... திகதி: ..........................................

B.பாலின அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு

.............................................................................................(முழுப் பெயர்) ஆகிய நான்,அறியத்தருவதாவது,மேற்குறிப்பிட்ட நபர் பால் நிர்ணயம் தொடர்பில் என்னால் முழுமையாக பரிசோதிகப்பட்டார் என்றும்,பரிசோதனை பெறுபேறுகளின்படி அவர் ஆண் /பெண் இலுருந்து பெண் /ஆண் திருனங்கைக்குரிய மாற்றத்தை பெற்றுள்ளார் என உலகளாவிய நோய் பாகுபாடு -10 இன் பிரகாரம் முடிவுபெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நபர் அவரின் சிகிச்சை முறைகள் பற்றி நன்கு அறிவுறுத்தப்பட்டு,அவரின் இந்நிலை தொடர்பிலான தேவைகளையும் பாலின வெளிப்பாடு தொடர்பான இலக்குகளை அடையவும் சிறந்த சேவைகளை பெற்றுகொள்வதற்கான வழிமுறைகளை பெறும் வகையில் இலகுபடுத்தப்டுவார்.

மேலும் தேவையான வழிமுறைகளை கையாண்டதின் பின் மேற் குறிபிட்ட நபர் ஒமொனே சிகிச்சை மற்றும் சத்திரசிகிச்சை மேற்கொள்ள பரிந்துரைக்கப்டுவார்.

நான் மேலும்,மேற்கண்ட நபர் உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும்,உலக திருனங்கைகளுக்குரிய சுகாதார தொழிற்சபையினால் (WPATH) அங்கீகரிக்கபட்டதும்,பிரசுரிக்கப்பட்டதுமான தரத்தை உடைய சேவையை பெற்று,அவருடைய சமூக அங்கத்துவத்தை பூரணம் செய்து மற்றும் பால் மாற்றத்தை அடைந்துள்ளார் என இத்தால் உறுதிசெய்கின்றேன்.

மேலும்,மேற்கண்ட நபரின் பால் ஆனது ………………இலிருந்து …………………இற்கு ………………………இல் மாற்றமடைந்துள்ளர்.மற்றும் பிறப்புச்சான்றிதழில் கீழ் விவரிக்கப்பட்டுள்ள பாலின மாற்றம்,பெயர் மாற்றம் செய்வதற்கு,இவர் பொருத்தமானவர் என உறுதிசெய்கிறேன்.

புதிய பெயர் ……………………………………………………………………………………

புதிய பால் ………………………………………………

பெயர் ………………………………………………………

கையொப்பம் ………………………………………………

(மனநல விசேட வைத்திய நிபுணர் )

………………………………………………………

(நிர்வாக முத்திரை)

………………………………………………………

(திகதி)

பெயர் ………………………………………………………

கையொப்பம்:……………………………………………

(நிலையப் பொறுப்பதிகாரி)

……………………………………………

(நிர்வாக முத்திரை)

………………………………………………………

(திகதி)

## திருநங்கை பற்றிய அறிவிப்பு பதிவு

வைத்தியசாலையின் பெயர்.............................................................. பிரிவு ..............................................................

| திகதி | பெயர் | பிறந்த திகதி | அடையாள அட்டை இலக்கம் | பிறப்பின்போது பால் | தற்போது விரும்பும் பால் | முகவரி | நோயாளர் கட்டில் பதிவேட்டு இலக்கம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |